**தெஹிஓவிட்ட பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 18 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஜுன் 28 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் தெஹிஓவிட்ட பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீடு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய சம்பள மீள்நிரப்பு கணக்கு மீதி ரூபா 13,695 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகளை தயாரிக்க வேண்டும். | 2019 ஆண்டின் போது சரி செய்யப்பட்டுளளது. |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு வழங்கல் மற்றும் உபகரண கடன்கொடுனர் மீதி ரூபா 24,970 ஆன போதும், ரூபா 743,326 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகளை தயாரிக்க வேண்டும். | பொது வழங்கல் கடன்கொடுனர் கூட்டுத்தொகை ரூபா 743,326 ஆன தொகை வழங்கல் மற்றும் உபகரண (603) கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை 2019 ஆண்டின் போது சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| (iii) | கடந்த ஆண்டின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது நூலக புத்தகங்கள் கொள்வனவு செய்யும் போது கிடைத்திருந்த முறையே ரூபா 80,084 தொகை மற்றும் ரூபா 61,715 ஆன வட்டம் கணக்கீடு செய்யப்படாததனால் நூலக புத்தகங்களில் பெறுமதி ரூபா 141,799 யினால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | கிடைத்த வட்டத்துடனே நூலக புத்தகங்களை கணக்கீடு செய்ய வேண்டும். | கணக்காய்வு அறிக்கையில் ரூபா 593,124 ஆக குறிப்பிடப்பட்ட கோதும் 2018 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நூலக புத்தகங்களின் பெறுமதி ரூபா 513,039 ஆனது. பொது பேரேட்டில் நூலக புத்தக கணக்கில் கொள்வனவு சரியான பெறுமானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (iv) | ரூபா 12,196,750 பெறுமதியான 06 மோட்டார் வண்டிகள் மற்றும் 04 இயந்திர உபகரணங்களின் | அனைத்து சொத்துக்களு ம் | துணை பதிவேடுகளில் கணக்கு தயாரிக்கும் சந்தர்ப்பத்தின் போது போதியளவு தகவல்கள் |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | மூலதனமாக்கப்பட வேண்டும். | இல்லாதிருந்ததனால் மோட்டர் வண்டி மற்றும் கருத்தை வண்டி கணக்கிற்கு உள்ளடங்க வேண்டிய பெறுமானங்கள் குறைத்து குறிப்பிடப்பட்டிருந்தது. சரியான அட்டவணையொன்றை குறித்த விடய உத்தியோகத்தர் இடமிருந்து பெற்றுக்கொண்டு மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (v) | மீளாய்வாண்டினுள் 04 நிதிய மூலங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 26,798,952 ஆன வேலைகளின் பெறுமதி, நிதி செயற்பாட்டு கூற்றிற்கு கணக்கீடு செய்யாததுடன் 2018 திசெம்பர் 31 திகதிக்கு வேலை கடன்படுனர் மற்றும் கடன்கொடுனர் ரூபா 25,317,252 யினால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | மூலதன உதவி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இந்த சபை வெளிதரப்பினரின் கீழ் கிடைக்கும் நிதிய மூலங்களை இது வரை வைப்பு கணக்கினூடாக குறித்துள்ளது. எனினும் 2019 ஆண்டின் இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது அந் நிதியங்கள் ஜர்னல் குறிப்பொன்றினூடாக சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (vi) | முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுளள 2016 பண்டக மென்மையாய்வினால் அகற்றப்பட்ட பொருட்களின் பெறுமதி ரூபா 148,950 ஆன தொகை கணக்குகளிலிருந்து அகற்ற மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்குகளை சரி செய்ய வேண்டும். | தொடர்புடைய விடய உத்தியோகத்தர்களின் விடய பதிவேடுகளுடன் சரியாக உறுதிப்படித்திற்கொண்டு 2019 ஆண்டில் கணக்கு தயாரிக்கும் போது சரி செய்கிறேன். |
| (vii) | முன்னைய ஆண்டின் சுட்டிக்காட்டிருந்த ரூபா 3,141,410 ஆன 12 பண்டக அலகுகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | தொடர்புடைய விடய உத்தியோகத்த்களின் விடய பதிவேடுகளுடன் சரியாக உறுதிப்படித்திற்கொண்டு 2019 ஆண்டின் கணக்கு தயாரிக்கும் போது சரி செய்கிறேன். |

(ஆ) **இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் 08 கணக்கு விடயங்களில் நிதிக் கூற்றுக்கள் மற்றும் துணைப் பதிவேடுகளிற்கிடையில் ரூபா 20,166,631 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | நிதிக் கூற்றுக்கள் மற்றும் துணைப்பதிவேடுகளிற்கிடையில் உண்மை தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் | துணைப்பதிவேடுடன் பரிசீலனை செய்து வேறுபாடுகள் தீர்க்கப்படவுள்ளது. |

(இ) **தொங்கல் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2009 ஆண்டு முதல் நிலவி வரும் தொங்கல் கணக்கு செலவு மீதி ரூபா 4,553 தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

(ஈ) **எதிர்பாராத பொறுப்புகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதிக்கு சபைக்கு எதிரா வெளித்தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட 14 விழக்குகள் மற்றும் சபையினால் 03 வெளித்தரப்பினருக்கு தாக்கல் செய்யப்பட்ட 17 வழக்ககள் தொடர்பாக தகவலகள் நிதிக் கூற்றக்கள் மூலமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்பாராத பொறுப்புகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். | பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தினை பயன்படுத்தி 2019 ஆண்டிலிருந்து இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது வெளிப்படுத்தப்பட வேண்டிய விடயங்களை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(உ) **செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2010/11 ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ரூபா 2,163,505 தொகையை 2018 திசெம்பர் 31 திகதி வரையும் உள்நாட்டு இரைவரி திணைக்களத்திற்கு அனுப்பாமல் செலுத்த வேண்டிய கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நீண்ட காலமாக நிலவி வரும் செலுத்த வேண்டிய கணக்குகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி கணக்கின் மீதியை கூடிய விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158(1) மற்றும் 159 பிரிவுகள் | ஓராண்டை விஞ்சியிருந்த கூட்டுத்தொகை ரூபா 3,704,943 ஆன வீத வரி மற்றும் ஏக்கர் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வீத வரியை அறவிடுவதற்கு சட்டத்தின் பிரகாரம் ஆதனங்கள் இரத்து செய்யும் சில வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. அதன் பிரகாரம் பிரிவு இலக்கம் 01, 02, 03, மற்றும் 06 ஆம் இலக்கத்தின் கீழ் ஆதனங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. ஏக்கர் வரி அறவிடுவதற்காக சொத்துக்கள் ஒப்பாய்வு நடவடிக்கை மற்றும் வரி சேகரிப்பதற்கு நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371 (5) | 05 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 134,650 ஆன முற்பணம் 2018 திசெம்பர் 31 வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் செயற்பட வேண்டும். | ரூபா 57,150 யினை 2019 மே 31 திகதியன்று தீர்த்துள்ளதுடன் அங்கத்தவ எரிபொருள் கொடுப்பனவு பந்தல் நிர்மானிப்பதற்கான பணம் 2019 ஆண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | 2006 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 2,844,628 ஆன காலம் கடந்த வைப்பு தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | நிதிப்பிரமாணம் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2006 ஆண்டு முதல் 2012 ஆண்டு வரை ரூபா 2,779,197 இலிருந்து ரூபா 871,872 தொகை சபை வருமானத்திற்கு எடுக்கப்பட்டது எனவும் 2013 முதல் மீதியாக காணப்படும் வைப்புத் தொகை சபை வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

ல.

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் xxiv அத்தியாயத்தின் 1.6 பிரிவு | இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் சேவையை விட்டுச் சென்ற 4 ஊழியர்களிடமிருந் து அறவிட வேண்டிய ரூபா 76,945 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தாபன விதிக்கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | ஓய்வு பெற்ற உத்தியோகத்தரின் கடன் மீதியை பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்கும் இடமாற்றம் பெற்று சென்ற உத்தியோகத்தரின் கடன் மீதியை உள்ளுராட்ச்சி ஆணையாளர் அலுவலகத்தில் கேட்டறியவும் சேவையை விட்டுச்சென்ற இரண்டு உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை அறவிடுவதற்கு அறிவூட்டப்பட்டுள்ளதுடன் பிணையாளர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சபைக்கு சொந்தமான 04 வாகனங்களின் எரி பொருள் பாவனையினை சுற்றறிக்கை பிரகாரம் பரிசீலனை செய்யதிருக்கவில் லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆண்டிற்காக 15 வாகனங்கள் காணப்படுவதுடன் அவற்றில் 08 இனது எரி பொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மிகுதி 07 வாகனங்களில் 02 மோட்டார் சைக்கிலகள், 02 டெகடர்கள், ஓர் முற்சக்கர வண்டி, நீர் பவுசர் ஒன்று மற்றும் JCB இயந்திரம் என்பன உள்ளடங்கியுள்ளதுடன் அவற்றில் ஓட்டத்தில் ஈடுபடுத்தாத மோட்டார் சயிகில், 02 டெகடர் மற்றும் எரி பொருள் பெறுக் கொடுக்காத மோட்டார் சயிகில் தவிர ஏனைய 04 வாகனங்களுக்காக எரி பொருள் பரிசீலனை மேற்கொள்ளப்படவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் வருமானங்களை விஞ்சிய செலவு ரூபா 7,753,004 ஆனதுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 9,295,006 ஆனது.

**2.2 வருமான நிருவாகம்**

**2..1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 3,230,700 | 3,289,025 | 4,051,498 | 3,705,905 | 3,230,700 | 3,295,460 | 4,629,781 | 4,468,378 |
| (ii) | வாடகை | 5,955,650 | 6,083,257 | 5,645,519 | 1,929,353 | 8,186,792 | 5,761,318 | 5,942,348 | 1,491,615 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 800,000 | 819,410 | 819,410 | 96,518 | 800,000 | 669,600 | 672,350 | 96,518 |
| (iv) | ஏனைய வருமானம் | 55,743,600. | 59,322,822 | 55,912,973 | 37,376,957 | 53,602,300 | 45,487,931 | 40,228,387 | 33,967,107 |

**2.2..2 காணி வரி**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2013 முதல் 2016 ஆண்டு வரையான காலபகுதியினுள் துண்டாடப்பட்டு விற்பப்பட்ட 122 காணி பங்குகளின் உள்ளவாறான விற்பனை பெறுமதிற்கு பதிலாக மதிப்பீட்டு பெறுமான அடிப்படையில் ஒரு சதவீத வரியாக ரூபா 895,284 அறவிடப்பட்டிருந்தது. | உள்ளவாறான விற்பனை பெறுமதி மீது வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணி பதிவாளர் அலுவலகத்தில் காணிகளின் உள்ளவாறான விற்பனை பெறுமதியை உறுதிகளை பரிசீலனை செய்து அறிக்கையிடுமாறு வருமான பரிசோதகர்களுக்கு அறிவூட்டப்பட்டுள்ளது. |

**2.2.3 கடை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வங்கிக்காக வாடகைக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டிருந்த சபை அமைந்துள்ள பலநோக்கு கட்டிட தொகுதியின் முதலாம் மாடியில் 319.5 சதுர மீட்டர்களைக் கொண்ட 3 பகுதிகளிற்கும் மலசலகூட வசதிகள் வழங்க முடியாத காரணத்தால் வாடகைக்கு வழங்க முடியாமலிருந்ததனால் எதிர்பார்த்த ரூபா 12,000,000 ஆன ஒரே தடவையில் சேர்க்கும் பணம் மற்றும் ஆண்டிற்கு ரூபா 366,000 வீதப்படியான வாடகை சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடக்க வேண்டும். | எதிர்காலத்தில் அக் குறைபாடுகளை ஒழுங்கு செய்து டென்டர் கோரி அக் கடையறைகளை வாடகைக்கு வழங்கி பணம் அறவிட எதிர்பார்க்கிறது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மேற் குறிப்பிடப்பட்ட வியாபார தொகுதியின் 16 கடையறைகளில் ரூபா 5,256,640 ஆன ஒரே தடவை சேர்க்கும் பணம் மற்றும் 2018 ஆகஸ்ட் வரையில் தண்டப்பணம் உள்ளடங்களாக நிலுவை கடையறை வாடகை, ரூபா 7,783,797 ஆன தொகை அறவிட வேண்டி இருந்ததுடன் கடை உரிமையாளருடன் ஒப்பந்தம கைச்சாத்திடப்படாமையால் சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க தடையாகவும் அவ்வாறே அறவிடலில் அவதானம் நிலவியது. | சட்டங்கள் பிரகாரம் ஒப்பந்தங்கள் கைச்சாதிடப்பட்டு வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அக் கடையறைகளை பெற்றுக்கொண்டவர்களுட ன் கலந்துரையாடி அனைத்து நிலுவை தொகையையும் 39 தவனைகளின் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டதுடன் அதற்கு இணங்கிய சிலர் தற்போது கொடுப்பனவு செய்கின்றனர். ஏனைய அனைத்து கடையறை உரிமையாளர்களுக்கு அறிவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் ஒப்பந்தம் கைச்சாத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படடுள்ளது. அவ்வாறில்லை எனின் அட்டென்டர்களை இரத்துச் செய்து மீள் டெண்டர் கோர தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2018 திசெம்பர் 31 தகதியன்று இறைச்சி மற்றும் மீன் கடைகளிலிருந்து அறவிட வேண்டிய கடை வாடகை ரூபா 125,276 மற்றும் தண்டப்பணம் ரூபா 23,787 ஆனதுடன் அவற்றில் ரூபா 93,980 தொகை 1991 முதல் 1997 வரையான காலத்திற்குரிய அறவிட வேண்டிய மீதிகள் ஆனது. | வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 1991-1997 வரையான காலத்திற்குரிய அக் கடை உரிமையாளர்களின் பெயர் படடியலொன்று எம்மிடமிருந்த போதும் தப்போது அவர்கள் அவ் இடங்களில் வசிக்காததுடன் அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா என உறுதிப்படுத்த பிரதேச செயலகத்திற்கு தொடர்புடைய தகவல்களை கோரி கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஏனைய நிலுவையை அறவிட நடவடிக்கை எடுத்ததுடன் தெஹிஓவிட்ட மாட்டிறைச்சிக் கடையை பழைய டென்டரை இரத்துச் செய்து இரண்டாம் டென்டர்காரருக்கு வழங்கப்பட்டது. |

**2.2.4 அனுமதிப்பத்திர கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| காலத்தை குறிப்பாக இனங்கண முடியாத பெற வேண்டிய வியாபார அனுமதிபத்திர கட்டணம் ரூபா 95,518 தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த தொகையை பதிவழிக்க அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கேகாலைக்கு அனுப்பிய போதும் அதற்காக பதிவேடுகளை அனுப்புமாறு அறிவித்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. |

**2.2.5 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 9,958,326 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 20,900,000 ஆனது. | வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | 2018 நீதிமன்ற தண்டப் பணத்திற்கான அட்டவணைகளில் 2018 சனவரி மாதம் முதல் 2018 ஒக்தோபர் மாதம் வரையான காலபகுதி மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது. 2018 முத்திரைக் கட்டணத்திற்கான விபரங்கள் கிடைக்காததுடன் இதற்காக துரிதமாக அறிக்கைவிட்டு பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) துணைச் சட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) உள்ளூராட்சி அமைச்சரினால் 1988 ஆண்டில் பிரசுரிக்கப்பட்டிருந்த 42 துணைச்சட்டங்களில் 15 துணைச்சட்டங்களை ஏற்றுக்கொண்டு 2018 ஜுலை 26 திகதிய 2082 இலக்க | உரிய முறையில் துணைச் சட்டம் விதிக்கப்பட்டு அதற்கு இணங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும். | பாதைகளில் வாகனங்களை நிறுத்துவதற்கான துணைச் சட்டம் தொடர்பாக முற்சக்கர வண்டி சங்கங்களை அறிவூட்டும் வேலை |

| | | | |
|---|---|---|---|
| | வர்த்தமானியின் பிரசுரிக்கப்பட்ட பாதைகளில் வாகனங்களை நிறுத்வது தொடர்பாக துணைசச் சட்டம் விதிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிடிருக்கவில்லை. | | திட்டம் 2019 பெப்ரவரி 20 ஆம் திகதி நடாத்தப்பட்டதுடன் சில சங்கங்கள் அனுமதிபத்திரம் பெற்றுக்கொள்ளாமை காரணமாக கடிதம் ஊடாக அவர்களை அறிவூட்டியுள்ளது. சுடலை கட்டுப்பாடு தொடர்பான துணைச் சட்டத்திற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |
| (ii) | விளம்பர அறிவித்தல் பிரசுரிப்பது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட துணைச்சட்டத்தை ஏற்றுக்கொள்ள அல்லது துணைச் சட்டமொன்றை தயாரித்திற்கொள்ள மீளாய்வாண்டு இறுதி வரையும் முடியாமல் இருந்தது. | துரிதமாக துணைச்சட்டம் விதிக்கப்பட வேண்டும் | விளம்பர அறிவித்தல துணைச்சட்டம் ஆளுனரின் கையொப்பத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. |

(ஆ) **கழிவுப் பொருள் முகாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 2,101 வீதவரி அலகுகளை உள்ளடங்கிய 05 பிரிவுகளிலிருந்து கழிவு பொருள் சேகரிக்கப்படாததனால் பொது மக்கள் முறைப்பாடு மற்றும் எதிர்ப்பு முன்வைக்கப்பட்ட போதும் அதற்கான தீர்வு நடைமுறைப்படுத்தப்படவில்லை. | சபைக்கு சொந்தமான அனைத்து பிரதேசங்களும் உள்ளடங்கும் வகையில் கழிவு பொருள் சேர்க்க வேண்டும். | சபையின் கழிவு பொருள் முகாமை மத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டு தற்போது 3 வருடங்கள் ஆகின்றது. எனினும் இது வரை அதன் கொள்ளலவை அதிகரிக்க கட்டிடம் நிர்மானிக்க இயலுமை கிடைக்கவில்லை. |

(இ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் மீது சபை அறிந்திருக்காததனால் அந் நோக்கத்திற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் 2018 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்ட கால திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் அறிவூட்டிய பின்னர் 2018-2022 நான்கு வருட திட்டத்திற்கு மற்றும் 2019 வருடாந்த திட்டத்மிற்கும் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

### 3.2 சொத்துக்கள் முகாமை

#### 3.2.1 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வருடாந்த மென்மையாய்வொன்றின் போது இனங்கண்டிருந்த அனுமதியற்ற நிர்மாணங்கள், குடியேறல், சுரங்க அகழ்வு என்பவற்றை அகற்றுவதற்கு/ தடுக்க, எல்லைகளை சீராக்கி பாதுகாக்க மற்றும் சபைக்கு வருமானம் ஈட்டுவதற்காக ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்களை பாதுகாக்க நடவடிக்கை எடக்க வேண்டும். | அனுமதியற்ற நிர்மாணங்கள், குடியேறல், சுரங்க அகழ்வு போன்றவை தொடர்பாக மற்றும் அவற்றை அகற்றுவதற்கு/ தடுப்பதற்கு, எல்லைகளை சீராக்கி பாதுகாக்க மற்றும் சபைக்கு வருமானம் ஈட்டுதல் போன்ற நடவடிக்கைளுக்காக சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதுடன் அவ்வாறான தவறுளை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

#### 3.2.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| உள்ளூராட்ச்சி அமைச்சுக்கு சொந்தமான ரூபா 18,113,220 பெறுமதியான 3 வாகனங்கள் மற்றும் சபரகமுவ மாகாண சபைக்கு சொந்தமான ரூபா 12,498,999 பெறுமதியான 05 டெக்டர்களும் கம்பெக்டரொன்றும் சுவீகரிக்கப்பட்டு பதிவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திக்கவில்லை. | வாகனங்களை் முறையாக சுவீகரித்து பதிவேடுகள் நாளாதுவரையாக பேணப்பட வேண்டும். | வாகனங்கள் சுவீகரித்தல் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### 3.3 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்படாமல் ரூபா 4,632,354 பெறுமதியான பெறுகைகள் மேற்கொண்டிருந்தன. | முறையான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டும். | மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 2019 ஜூன் மாதம் நடாத்தப்பட உள்ள நிதிக் குழுவிற்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்படவுள்ளது. |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிக்காக பாதீடுநூடாக ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்த 39 செலவின விடயங்களில் ரூபா 12,545,000 ஆன மொத்த ஒதுக்கீடும் 17 செலவின விடயங்களில் ரூபா 16,695,000 ஆன ஒதுக்கீடுகளின் 50 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடையில் பெறுமதியான கூட்டுத் தொகை ரூபா 11,049,649 யினை பயன்படுத்தியிருக்கவில்லை. | மிகவும் நடைமுறை சாத்தியமான பாதீடு தயாரிக்க மற்றும் அதனை நிதிக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த கூற்றுடன் ஒருமைப்படுகிறேன். |